செய்தி வெளியீடு எண்:692 நாள்:06.09.2021

**செய்தி வெளியீடு**

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றில் 365 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (6.9.2021) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையின்கீழ் செயல்படும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், நகர் ஊரமைப்பு இயக்ககம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப இளநிலை எழுத்தர், இளநிலை உதவியாளர், திட்ட உதவியாளர், அளவர்/உதவி வரைவாளர், பண வசூலாளர், அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களில் 28 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 34 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதியின் அடிப்படையில் பட்டியல் எழுத்தர், அலுவலக உதவியாளர், எடையாளர் மற்றும் காவலர் பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும்;

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் கொரோனா தொற்றால் உயிரிழந்த 49 பணியாளர்கள் உட்பட 303 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதியின் அடிப்படையில், தொழில்நுட்ப உதவியாளர், இளநிலை உதவியாளர், மின் கணக்கீட்டாளர், களப்பணி உதவியாளர், அலுவலக உதவியாளர், தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 7 வாரிசுதாரர்களுக்கு கருணை

அடிப்படையில் பணிநியமன ஆணைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி, மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில் பாலாஜி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹிதேஸ்குமார் எஸ். மக்வானா, இ.ஆ.ப., எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., நகர் மற்றும் ஊரமைப்புத் துறை இயக்குநர் திரு.E. சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ம.கோவிந்த ராவ், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) திரு.ச.சுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9